செயல்பட்டு வருகிறது. அந்தப் பள்ளியை எடுத்து நடத்தக்கூடிய நிறுவனர், அந்தப் பள்ளிக்குத் தேவையான கட்டட வசதி, குடிநீர் வசதி, கழிப்பிட வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் எதையுமே செய்து தரமாட்டேன் என்கிறார். அதுபற்றி அவரிடம் கேட்டால், நீங்கள் வேண்டுமானால் செய்து கொள்ளுங்கள் என்று சொல்கிறார். அப்பள்ளியில் 51 மாணவர்கள் படிக்கின்றார்கள். இரண்டு ஆசிரியர்கள் அங்கு பணிபுரிகின்றார்கள். அப்பள்ளியில் அடிப்படை வசதிகள் எதுவுமே இல்லாத காரணத்தினால், அப்பள்ளியை அரசே ஏற்று நடத்துமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். தனியார் பள்ளியை அரசு எடுத்து நடத்துவது என்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. அவர்கள் உடனே நீதிமன்றத்திற்குச் சென்று விடுவார்கள். அதேநேரத்தில், அப்பள்ளியில் infrastructure அதாவது, அடிப்படை வசதிகள் எதையுமே செய்து தரவில்லை என்று சொன்னால், அரசு அப்பள்ளி நிருவாகத்திற்கு உடனடியாக notice வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 82, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

82—

புதிய மின்மாற்றி

***22915—திரு. சு. ரவி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், கிருஷ்ணாபுரம் குடியிருப்புப் பகுதியில் 100 KVA திறன் கொண்ட புதிய மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிருஷ்ணாபுரம் ஊராட்சி, கிருஷ்ணாபுரத்தில் ஒரு புதிய 100 KVA திறன் கொண்ட மின்மாற்றி வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். ஏற்கெனவே, அங்கு 100 MVA திறன் கொண்ட ஒரு மின்மாற்றி இருக்கின்றது. போதிய மின் பளு இல்லாத காரணத்தினால், அந்த 100 MVA மின்மாற்றியே போதும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தை மின் மிகை மாநிலமாக உருவாக்கினார்கள். அதைத் தொடர்ந்து அம்மா ஆட்சியை சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிற அண்ணன் எடப்பாடியார் அவர்களும் தமிழகத்தைத் தொடர்ந்து மின் மிகை மாநிலமாக வைத்துக் கொண்டிருக்கின்றார்.

எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட கிருஷ்ணாபுரம் கிராமத்திற்கு தனியாக 100 KVA திறன் கொண்ட மின்மாற்றி ஒன்றை அமைத்துத் தருமாறு கோரிக்கை வைத்தேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் கிராமத்திற்கு புதியதாக மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியமில்லை என்று

2019 ஜூலை 11]

சொல்கிறார்கள். தற்போது கிருஷ்ணாபுரம் SS2 100 KVA திறன் கொண்ட மின்மாற்றியிலிருந்துதான் விவசாயிகளுடைய pump set-களுக்கும், கிருஷ்ணாபுரம் கிராமத்திற்கும், பழைய காலனிக்கும் மின்சார விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கிருஷ்ணாபுரம் கிராமத்தில் low voltage இருப்பதாக மக்கள் எல்லோரும் தொடர்ந்து என்னிடத்தில் கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, இன்றைக்கு இந்த மின் துறையை 'கண்ணை இமை காப்பது போல்' காத்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள் கிருஷ்ணாபுரம் கிராமத்திற்கு என்று தனியாக 100 KVA திறன் கொண்ட ஒரு மின்மாற்றியை அமைத்துத் தர வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவி, கேள்வியை கேட்கும்போது பொறுமையாகக் கேட்காமல், சீக்கிரமாக கேள்வியைக் கேளுங்கள். நேரம் இல்லை.

திரு. சு. ரவி: தனியாக 100 KVA திறன் கொண்ட மின்மாற்றியை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கிருஷ்ணாபுரம் கிராமத்தில் மட்டும் நான்கு 100 KVA மின்மாற்றிகளும், ஒரு 63 KVA மின்மாற்றியும் உள்ளன. இதில் இரண்டு 100 KVA மின்மாற்றிகளில் 53 KVA அளவிற்கு மட்டும்தான் மின் பளு உள்ளது. மீதி இரண்டு மின்மாற்றிகளில் 60 KVA அளவிற்கு மின் பளு உள்ளது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், விவசாயத்திற்கு அதிகமாக மின் இணைப்புகள் உள்ளதாக சொல்லியிருக்கின்றார்கள். வீட்டிற்கான மின் இணைப்புகள் 229 மட்டுமே உள்ளன. மேலும், 3 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் இருக்கின்றன. 56 விவசாய மின் இணைப்புகள் மட்டும் இருக்கின்ற காரணத்தினால், மின்சாரம் சீரான அளவில் இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் voltage குறைவாக இருப்பதாகச்

சொன்னார்கள். காலையில் அதனை நான் ஆய்வு செய்தேன். ஆய்வு செய்கின்றபோது, 210 voltage இருந்தது. எனவே அங்கு தேவை இருப்பின், மின் பளு அதிகமாகும்போது மாண்புமிகு அம்மாவின் அரசு மின்மாற்றி அமைப்பது குறித்து பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வளர்புரம், கிருஷ்ணாபுரம், பெருங்களத்தூர், மூதூர், வேலூர், கோணகம் போன்ற கிராமங்களில் நெசவாளர்களும், விவசாய பெருமக்களும் அதிகமாக வாழ்கின்றார்கள். அந்தப் பகுதிகளில் சீரான மின்சாரம் கிடைத்திட வளர்புரத்தில் ஒரு 33 KV துணை மின் நிலையம் அமைக்க நமது மின் துறையால் நிலம் வாங்கப்பட்டுள்ளது. அந்த இடத்தில் விரைவாக ஒரு துணை மின் நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இடம் மின் வாரியத்தினரால் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கின்றார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு 56 துணை மின் நிலையங்களை அமைப்பதாக விதி 110-ன்கீழ் அறிவிப்பு செய்திருக்கின்றார்கள். இடம் எங்கே இருக்கின்றதோ, அங்கே அமைக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தப் பகுதியில் இடம் இருக்கின்ற காரணத்தால், அங்கே முன்னுரிமை அடிப்படையில் துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2019 ஜூலை 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.*

திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சுழி தொகுதி, காரியாப்பட்டி பகுதியில் குறைவான மின்னழுத்தம் கடுமையாக இருக்கக்கூடிய காரணத்தால் விவசாயப் பெருமக்கள் பெரிதும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருந்தது. இப்பொழுது, மின்சார வாரியத்திலிருந்து அதைத் தீர்க்கக்கூடிய வகையிலே 110 கே.வி. துணை மின் நிலையம் அமைப்பதற்காக உடுக்கன்குளம் கிராமத்தில் இடம் வாங்கப்பட்டு, உரிய முன்மொழிவுகள் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-லே நிறைய துணை மின் நிலையங்கள் அமைக்கப்படுமென்று இப்பொழுது அறிவித்திருக்கிறார்கள். எனவே, உடுக்கன்குளம் கிராமத்திலும் 110 கே.வி. துணை மின் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதையும், அதேபோல அருகில் இருக்கக்கூடிய வீரசோழன், சேதுபுரம், ரெட்டியார்பட்டி போன்ற கிராமங்களிலும் துணை மின் நிலையங்கள் அமைக்க வேண்டிய தேவை இருப்பதால், அங்கேயும் வருங்காலங்களிலே அரசு பரிசீலனை செய்யுமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய பகுதியில் அரசு நிலங்கள் இருக்கின்றன என்றும், வகை மாற்றத்திற்காக கோப்பு வந்திருக்கின்றது என்றும் சொல்லியிருக்கின்றார்கள். வேறு துறையினுடைய இடமாக இருந்தால் மின் வாரியத்திற்கு மாற்ற வேண்டும். அந்தக் கோப்புகள் எங்கே இருக்கின்றன என்று ஆய்வு செய்து, அந்த நிலத்தை உடனடியாகக் கையகப்படுத்தி துணை மின் நிலையம் அமைப்பதற்குண்டான நடவடிக்கையை மேற்கொள்கின்றோம். பொதுவாகவே, மாநிலத்தில் மின் பளு அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலேதான், எங்கெங்கு தேவை இருக்கின்றதோ, அங்கெல்லாம் துணை மின் நிலையம் அமைக்க வேண்டும் என்பதற்காக, கிட்டத்தட்ட இந்த 8 ஆண்டு காலத்தில் மட்டும் 507 துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.*

இதுகாறும் 1,682 துணை மின் நிலையங்கள் இருக்கின்றன. அதிலும் குறிப்பாக இந்த இரண்டு ஆண்டுகளில் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அறிவிக்கப்பட்ட 507 துணை மின் நிலையங்களிலே கிட்டத்தட்ட இதுகாறும் எங்கும் இல்லாத அளவிற்கு 179 துணை மின் நிலையங்கள், மரியாதைக்குரிய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அண்ணன் அவர்கள் தலைமையிலான அரசால் அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. எங்கெங்கெல்லாம் மின் பளு குறைவாக இருக்கின்றதோ, அங்கெல்லாம் துணை மின் நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. துணை மின் நிலையம் அமைப்பதற்கு இடம் கிடைக்காத காரணத்தினால் பல பகுதிகளில் இதுபோன்ற பிரச்சினைகள் இருக்கின்றன. இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழகத்திலேதான் அதுவும் விருதுநகர் மாவட்டத்திலே 765 KV துணை மின் நிலையம் அமைக்கப்படவிருக்கின்றது. அதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு டெண்டர் எல்லாம் விடப்பட்டிருக்கின்றது. ஆக, இதுபோன்ற துணை மின் நிலையங்களை அதிகமாக அமைக்கின்றபொழுது, விவசாயத்திற்குத்தான் பிரச்சினை வருகிறது. ஏனென்று சொன்னால், விவசாயத்திற்கு டெல்டா மாவட்டத்திற்கு 12 மணி நேரமும், மற்ற பகுதிகளுக்கு 9 மணி நேரமும் மின்சாரம் கொடுக்கின்றோம். நாம் அந்த 3 phase-ஐ 2 phase ஆக மாற்றுகின்றபொழுது விவசாயிகள் ஸ்டார்ட்டரை மேலே தள்ளி அந்த மின் மோட்டாரை இயக்குகின்றபோதுதான் மின் பளு குறைகின்றது. அதுபோன்ற ஒரு சூழ்நிலை வரக் கூடாது என்பதற்காகத்தான் முடிந்தவரை agriculture-க்காக தனியே மின்மாற்றி வைக்க வேண்டுமென்று நாங்கள் முடிவு செய்திருக்கின்றோம். அதற்கு அதிக நிதி செலவாகும் என்ற காரணத்தினால், நிதிநிலைக்கேற்ப நாங்கள் படிப்படியாக அதைச் செய்து கொண்டிருக்கின்றோம். இருந்தாலும், விவசாயத்தோடு தொழிற்சாலைகள் இருக்கின்ற பகுதிகள் இதனால் மிகவும் பாதிக்கப்படுகின்றன. விவசாயத்தோடு எங்கெங்கெல்லாம் தொழிற்சாலைகள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் விவசாயத்திற்காக 3 phase-ஐ 2 phase ஆக மாற்றும்போது அந்தத் தொழிற்சாலைகள் பாதிக்கப்படுகின்றன. அதுபோன்ற தொழிற்சாலைகளுக்கெல்லாம் முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்பதற்கு முதலில் நாங்கள் ஓர் ஆய்வு செய்து கொண்டிருக்கின்றோம். விவசாயத்திற்கு மின்சாரம் கொடுக்கின்றபொழுது தொழில் துறை பாதிக்கப்படுகின்ற காரணத்தால் அந்தப் பாதிப்பைக் குறைக்க வேண்டுமென்பதற்காக

2019 ஜூலை 11]

ஆய்வு செய்து கொண்டிருக்கின்றோம். அப்படி ஆய்வு செய்து எங்கெல்லாம் தொழிற்சாலைகள் இருக்கின்றனவோ, அதற்கும் போதிய அளவு மின்சாரம் கொடுக்க வேண்டுமென்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய எண்ணம். ஆக, இந்த அடிப்படையிலே துணை மின் நிலையமாக இருந்தாலும் சரி, மின் மாற்றிகளாக இருந்தாலும் சரி இந்த இரண்டு ஆண்டு காலத்தில் வேண்டிய அளவிற்கு நாங்கள் செய்து கொண்டிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையையும் பரிசீலித்து, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 83, மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம், மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

83—

உயர்மட்டப் பாலம்

***1924—திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, ஆவிளிப்பட்டி கிராமம், பெருமாயூரிலிருந்து, வீரசின்னம்பட்டி சாலையில் சந்தானவர்த்தி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நத்தம் சட்டமன்றத் தொகுதி, ஆவிளிப்பட்டி கிராமம், பெருமாயூரிலிருந்து, வீரசின்னம்பட்டி சாலையில் சந்தானவர்த்தி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டுவது குறித்து பெறப்பட்ட கருத்துருவின்மீது, ஊரக வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையைப் பெற்று, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு